கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை

சாட்சியின் சாட்சியம் **திரு V. ஜான் மினோ, பி.ஏ. பி. எல்,** கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி, உடுமலைப்பேட்டை(பொறுப்பு) அவர்களால் உறுதி கூறப்படுகிறது.

**அ.வ.எண். 212/2017** **நாள்: 08.12.2023** **வா.சா.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஷ்குமார் | தொழில் | : |
| த/பெ | : முத்துசாமி | கிராமம் | : |
| வயது | : | தாலுகா | : |
| ஜாதி | : | மாவட்டம் | : |
| சமயம் | : | | |

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

**குறுக்கு விசாரணை –**

வாதியை எனக்கு 15 வருடங்களாக தெரியும். வாதி, பைனான்ஸ் செல்வராஜ் என்பவரிடம் வேலை பார்த்து வருகிறார் என்றால் இல்லை. நான் ஆட்டோ பைனான்ஸ் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வாதியுடன் சேர்ந்து ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. வாதியுடன் சேர்ந்து நான் பைனான்ஸ் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. வாதி தொழில் முறையில் என்னுடன் பங்குதாரராக உள்ளார் என்றால் சரியல்ல. தாவா கிரைய ஒப்பந்தத்தில் என்ன சொத்து சொல்லப்பட்டுள்ளது என்றால் அது முழுமையாக கட்டி முடிக்கப்படாத வீடு. தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் என்னுடன் வேறு யார் சாட்சி கையொப்பம் போட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் காலி மனையிடம் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதிக்காக நான் வேறு கிரைய ஒப்பந்த பத்திரம் எதிலும் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் ஜானகிராமன் என்பவரது அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. நான் கையொப்பம் செய்த கிரைய ஒப்பந்தத்தில் ஜானகிராமன் என்பவரது அலுவலக முத்திரை எதுவும் போடப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு ஞாபகமில்லை. நான் சொல்லக்கூடிய ஜானகிராமன்

2012 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. தாவா கிரைய ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் ஜானகிராமனுடையது அல்ல என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2012ம் வருடம் ஜானகிராமன் இறந்த பிறகு அவரது பெயரை பயன்படுத்தி தாவா கிரைய ஒப்பந்த பத்திரத்தில் ஆவணம் தயார் செய்தவர் என்ற இடத்தில் இறந்துபோன ஜானகிராமன் என்பவரது பெயர் போலியாக பயன்படுத்தப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ 3 தாவா கிரைய ஒப்பந்த பத்திரம் போலியானது என்பதால்தான் அது பதிவு செய்யப்படுவதற்கு கொண்டு செல்லப்படவில்லை என்று சொன்னால் எனக்கு அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ 3 என் முன்னிலையில் தயார் செய்யப்படவில்லை என்றால் சரிதான் ஏற்கனவே தயார் செய்யப்பட்டு வைக்கப்பட்டிருந்த வா.சா.ஆ 3ல் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 3ல் சொல்லப்பட்டுள்ள பண பரிவர்த்தனை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எந்த மூல ஆவணத்தை வைத்து வா.சா.ஆ 3 தயார் செய்யப்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். வா.சா.ஆ 3 ல் நான் எத்தனை மணிக்கு கையொப்பம் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. வா.சா.ஆ 3 ல் சாட்சி கையொப்பம் செய்துள்ள மற்றொரு நபர் பற்றிய விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பைனான்ஸ் செல்வராஜ் என்பவருக்காக வாதி மோசடியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. பைனான்ஸ் செல்வராஜுக்காக வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்பதால்தான் பைனான்ஸ் செல்வராஜின் மனைவி வா.சா.ஆ 3ல் 2வது சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ 3ல், 1ம் பிரதிவாதியின் கையொப்பம் மோசடியாக போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆவண எழுத்தர் ஜானகிராமனின் கையெழுத்தும் வா.சா.ஆ 3ல் மோசடியாக போடப்பட்டுள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. நான், வாதியின் நெருங்கிய நண்பர்

என்பதால் மோசடியாக தயார் செய்யப்பட்ட வா.சா.ஆ 3க்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சி விசாரிக்கப்பட்டு, சாட்சியின் சாட்சியம் தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு, சாட்சியாலும் படித்து பார்க்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பு சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது,

ஒம்/—திரு.V.ஜான்மினோ,பி.ஏ.,பி.எல்.,
கூடுதல் மாவட்ட நீதிபதி, (பொறுப்பு)
உடுமலைப்பேட்டை.